அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண். 148 / 2017
தேதி. 01.12.2017

# ஓகி புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை போர்க்கால அடிப்படையில் சரிசெய்ய வேண்டும் சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வேண்டுகோள்

வங்கக்கடலில் உருவான ஓகி புயல் காரணமாக தென் மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக குமாரகோவில், தக்கலை, பார்வதிபுரம், அரண்மனை, திங்கள்சந்தை, வில்லுக்குறி சேதம் அடைந்து உள்ளது மிகவும் வேதனைக்குரியது.

சுமார் 200க்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் சாய்ந்ததால் நாகர்கோவில் தொடங்கி மார்த்தாண்டம் வரை 30 மணி நேரம் கடந்தும் மின்சாரமின்றி அப்பகுதி மக்கள் அவதியுற்று வருகின்றனர். மேலும் நூற்றுக்கணக்கான மரங்கள் மற்றும் செல்போன் கோபுரங்கள் சரிந்து விழுந்ததில் தொலைதொடர்பு மற்றும் இரு மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து சேவை முடக்கிவைக்கப்பட்டுள்ளது. உணவு தட்டுப்பாடு, வர்த்தகம் மற்றும் வெள்ள நீர் அபாயத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

நமது இயக்க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் புயலின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்கும் பணியில் மக்களுக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இதுபோன்ற பாதிப்புகளில் இருந்து மக்களை உடனடியாக மீட்க போர்க்கால அடிப்படையில் மரங்களை அகற்றும் பணி, மின்கம்பங்கள் சீர்செய்தல், போக்குவரத்தை சரி செய்தல் போன்ற பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு, மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com